# ஜீவ நதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

AUGUST 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

## ஆகஸ்ட் 2026 - இதழ் 228

**“கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்.”**

**சங்கீதம் 125:1**

**SHARJAH TAMIL CONGREGATION**

**(CSI KANYAKUMARI DIOCESE)**

**P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576**

**For private circulation only**

# அனுதின மன்னா

## கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீதம் 19:7)

| தேதி | நாள் | காலை | சிந்தனை வசனம் | மாலை |
|---|---|---|---|---|
| 1 | சனி | சங். 128 | 128:2 | உன். 4:1-9 |
| 2 | ஞாயிறு | ஏசா. 58:6-10 | 58:10 | நீதி. 14:14-21 |
| 3 | திங்கள் | 1 யோவா. 3:16-18 | 3:16 | யாத். 23:1-19 |
| 4 | செவ்வாய் | சங். 82 | 82:3 | ரோம. 15:1-13 |
| 5 | புதன் | மத். 9:35-38 | 9:35 | 1 யோவா. 3:11-17 |
| 6 | வியாழன் | 1 பேது. 3:8-12 | 3:8,9 | 1 யோவா. 4:7-18 |
| 7 | வெள்ளி | மத். 14:13-16 | 14:14 | ரோம. 12:9-15 |
| 8 | சனி | மீகா 6:5-8 | 6:8 | லூக். 15:13-32 |
| 9 | ஞாயிறு | 1 பேது. 3:18-22 | 3:21 | 1 தீமோ. 6:1-11 |
| 10 | திங்கள் | ஏசா. 1:12-17 | 81:16,17 | ஏசா. 49:1-16 |
| 11 | செவ்வாய் | மாற். 1:4-8 | 1:8 | 1 தெச. 1:1-8 |
| 12 | புதன் | கொலோ. 2:1-15 | 2:12 | யோவா. 3:1-8 |
| 13 | வியாழன் | எசே. 36:24-32 | 36:25 | 1 யோவா. 1:1-10 |
| 14 | வெள்ளி | எபே. 4:1-6 | 4:5 | அப். 8:26-40 |
| 15 | சனி | லூக். 20:1-8 | 20:4 | சங். 51:1-10 |
| 16 | ஞாயிறு | 1 கொரி. 10:14-22 | 10:17 | யோவா. 14:1-14 |
| 17 | திங்கள் | மத். 5:23-26 | 5:24 | யாத். 12:21-23 |
| 18 | செவ்வாய் | யாத். 24:3-11 | 24:8 | யோவா. 8:12-20 |
| 19 | புதன் | யோவா. 6:51-58 | 6:58 | மத். 26:27-29 |
| 20 | வியாழன் | 1 சாமு. 21:1-16 | 21:3 | லூக். 10:25-37 |
| 21 | வெள்ளி | 1 கொரி. 11:23-30 | 11:28 | மாற். 10:42-45 |
| 22 | சனி | யோவா. 6:29-35 | 6:35 | 1கொரி. 10:1-13 |
| 23 | ஞாயிறு | உபா. 26:5-11 | 26:5 | மத். 14:13-21 |
| 24 | திங்கள் | ரூத் 1:14-22 | 1:17 | லூக் 7:11-17 |
| 25 | செவ்வாய் | சங். 146 | 146:9 | லூக். 7:36-50 |
| 26 | புதன் | யோவா. 4: 5-14 | 4:9 | ஏசா. 11:10-16 |
| 27 | வியாழன் | யோவா. 1:43-51 | 1:46 | சங். 74: 9-19 |
| 28 | வெள்ளி | அப். 10:24-48 | 10:26 | எரே. 12:1-17 |
| 29 | சனி | பிலே. 1:10-25 | 1:15 | நீதி. 31:1-9 |
| 30 | ஞாயிறு | யாத். 1:1-22 | 1:17 | யாக். 2:1-6 |
| 31 | திங்கள் | எபே. 2:11-22 | 2:19 | லேவி. 19:1-18 |

# சபை ஆயரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உலக மீட்பரும் நமது ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் உங்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது திருச்சபையில் கடந்த மாதம் 10, 11 & 13 தேதி வரை COME and SEE என்ற நமது பேராய இவருட விடுமுறை வேதாகம பள்ளி (VBS) கருப்பொருளை மையமாகக் கொண்டு நமது திருச்சபையில் நடத்த ஆண்டவர் அருள்புரிந்தார். இந்த ஊழியத்திற்காக ஜெபித்த, தேவைகளுக்காக உதவிய, ஒத்துழைப்பு நல்கிய திருச்சபையின் விசுவாசிகள், ஜூனியர் சர்ச் பொறுப்பாளர், ஆசிரியர்கள், சபைக்குழு அங்கத்தினர்கள், தன்னார்வ பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். இந்த ஊழியத்தை நிறைவேற்றதி தந்த VBS Team Leader Mrs. Sheeba Reginald, அவர்களோடு இணைந்து இந்த பணியை நிறைவேற்றிய அனைத்து Directors ஒவ்வொருவருக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இவ்வருட விடுமுறை வேதகாம பள்ளி உண்மையாகவே நம்முடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. உற்சாகமாய் பங்களிப்பை அளித்த அனைவருக்கும் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.

இந்த ஆண்டின் அறுவடைப் பண்டிகையை நாம் அக்டோபர் மாதம் 11-ஆம் நாள் சிறப்பாக கொண்டாட ஆயத்தப்படுகின்றோம். இவ்வருட அறுப்பின் பண்டிகையின் கன்வீனராக Mr Binu kumar N மற்றும் Mr. P. Paul Priner ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை மனதார வாழ்த்துகிறேன். நமது திருச்சபையின் தேவைகளை மனதில் கொண்டு, அறுவடைப் பண்டிகையை முன்னிட்டு நடைபெறும் அனைத்து சிறப்பு நிகழ்வுகளிலும் உற்சாகமாய் உங்களுடைய ஒத்துழைப்பை அளிக்கவும், உங்கள் அனுதின ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளவும், உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபை சார்ந்த Mrs. & Mr. Rahul Gladlin Suthanya தம்பதிகளை கர்த்தர் ஆசீர்வதித்து இண்டாவது ஒரு பெண்குழந்தையை கொடுத்திருக்கின்றார். மேலும் Mrs & Mr. Asker Jenisha தம்பதிகளை ஆசீர்வதித்து ஒரு ஆண் குழந்தையையும் கொடுத்து குடும்பங்களை விருத்தி அடைய செய்திருக்கின்றார். ஆண்டவர் தாமே அன்பு பெற்றோர்களையும் குழந்தைகளையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

இறையாசி என்றும் உங்களோடு இருப்பதாக!

இறைப்பணியில்
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
சபை ஆயர்.

# அருளுரைப்பகுதி

### "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்"

**"கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்." (சங். 46:7)**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

தேவனுடைய அளவற்ற கிருபையினால் நாம் இன்னொரு புதிய மாதத்தின் வாசலில் நிற்கிறோம். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து, வழிநடத்தி, பல ஆபத்துகளிலிருந்து காத்து, இந்த மாதத்தைக் காணச் செய்த தேவனுக்கு நம் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம்.

புதிய மாதம் தொடங்கும்போது பலருடைய மனதில் பல கேள்விகள் எழுகின்றன. "இந்த மாதம் எப்படி இருக்கும்?", "என் குடும்பம் பாதுகாப்பாக இருக்குமா?", "என் வேலை நிலைத்திருக்குமா?", "என் உடல்நலம் எப்படி இருக்கும்?" என்று எண்ணலாம். ஆனால் தேவன் நமக்குக் கொடுக்கும் செய்தி பயத்தைப் பற்றியது அல்ல, நம்பிக்கையைப் பற்றியது. அதனால்தான் சங்கீதக்காரன், **"கர்த்தரை நம்புகிறவர்கள் சீயோன் மலையைப்போல் அசையாமல் இருப்பார்கள்"** என்று உறுதியாக அறிவிக்கிறார். இது ஒரு ஆறுதல் வார்த்தை மட்டுமல்ல, தேவனுடைய மாறாத வாக்குறுதி.

பழைய ஏற்பாட்டு அறிஞர் டெரெக் கிட்னர் (Derek Kidner) இந்த வசனத்தை விளக்கும்போது, "சீயோன் மலையின் வலிமை அதன் உயரத்தில் அல்ல, தேவன் அங்கே வாசம்பண்ணுவதில்தான் உள்ளது. அதுபோல விசுவாசியின் உறுதியும் அவனுடைய பலத்தில் அல்ல, தேவனுடைய பிரசன்னத்தில்தான் உள்ளது" என்று கூறுகிறார். இதை போல் நாமும் இந்த புதிய மாதத்தில் கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கின்றார்.

**1. தேவனை நம்புகிறவன் பயப்படமாட்டான்**

வாழ்க்கை எப்போதும் சீராக இருப்பதில்லை. சில நேரங்களில் பொருளாதார நெருக்கடிகள் வரும். உடல்நலப் பிரச்சனைகள் வரும். உறவுகள் முறியலாம். எதிர்பாராத இழப்புகளும் ஏற்படலாம். ஆனால் தேவனை நம்புகிற மனிதன் சூழ்நிலைகளைப் பார்த்து வாழ்வதில்லை, தேவனுடைய வாக்குறுதியைப் பார்த்து வாழ்கிறான்.

யோபுவின் வாழ்க்கை இதற்கு சிறந்த உதாரணம். அவர் சொத்துக்களையும், பிள்ளைகளையும், உடல்நலத்தையும் இழந்தார். இருந்தாலும் தேவனை இழக்கவில்லை. இறுதியில் தேவன் அவரை முன்பைவிட அதிகமாக ஆசீர்வதித்தார்.

இந்த புதிய மாதத்தில் என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் நம்மோடு இருப்பவர் யார் என்பது நமக்குத் தெரியும். அதனால் பயப்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கப்படுகின்றோம்.

**2. தேவன் தம்முடைய மக்களைச் சூழ்ந்து காக்கிறார்**

சங்கீதம் 125:2 இவ்வாறு கூறுகிறது:

*“எருசலேமை மலைகள் சூழ்ந்திருக்கிறதுபோல கர்த்தர் தமது ஜனங்களைச் சூழ்ந்திருக்கிறார்.”*

எருசலேம் நகரம் இயற்கையாகவே மலைகளால் பாதுகாக்கப்பட்டிருந்தது. அதுபோல தேவன் தம்முடைய ஜனங்களுக்கு உயிருள்ள அரணாக இருக்கிறார். இதை விளக்கின் போது

மத்தேயு ஹென்றி (Matthew Henry) இவ்வாறு எழுதுகிறார்:

“God’s protection around His people is stronger than the mountains around Jerusalem." “எருசலேமைச் சூழ்ந்த மலைகளைவிட தேவனுடைய பாதுகாப்பு தமது ஜனங்களை அதிக வலிமையுடன் சூழ்ந்திருக்கிறது.” நாம் அறியாத ஆபத்துகளிலிருந்தும் தேவன் நம்மைக் காக்கிறார். பலமுறை நாம் அறியாமலேயே அவர் நம்மைப் பாதுகாத்திருக்கிறார்.

இந்த புதிய மாதத்திலும் தேவன் நமக்கு முன்பாகச் செல்வார். நமது குடும்பம், வேலை, பிள்ளைகள், ஊழியம், எதிர்காலம் அனைத்தையும் அவர் தமது கரங்களில் பாதுகாப்பார்.

**3. தேவனை நம்புகிறவன் நிலைத்திருப்பான்**

இயேசு கூறிய உவமையில், கன்மலையின் மேல் கட்டப்பட்ட வீடு புயல், மழை, வெள்ளம் வந்தபோதும் இடிந்து விழவில்லை. ஏனெனில் அதன் அஸ்திபாரம் உறுதியாக இருந்தது.

நமது வாழ்க்கையின் அஸ்திபாரம் கிறிஸ்துவாக இருந்தால், சோதனைகள் நம்மைத் தாக்கலாம், ஆனால் நம்மை அழிக்க முடியாது.

ஜான் கால்வின் (John Calvin) இந்த சங்கீதத்தை விளக்கும்போது, “Believers may be shaken, but they will never be overthrown because God Himself upholds them." “விசுவாசிகள் அசைக்கப்படலாம், ஆனால் தேவன் அவர்களைத் தாங்குவதால் அவர்கள் முற்றிலும் வீழ்ந்துபோவதில்லை.” என்று குறிப்பிடுகிறார்.

எனவே இந்த புதிய மாதத்தில் நம்முடைய நம்பிக்கையை சம்பளம், பதவி, மனிதர்கள் அல்லது சூழ்நிலைகளின் மேல் அல்ல, மாறாத தேவனின் மேல் வைக்க அழைக்கப்படுகின்றோம்.

அன்புக்குரியவர்களே,
புதிய மாதம் என்ன கொண்டு வரப்போகிறது என்பதை நாம் அறியோம். ஆனால் இந்த மாதம் முழுவதும் நம்மோடு நடந்து, நம்மைக் காத்து, நம்மை வழிநடத்துகிறவர் யார் என்பதை நாம் அறிவோம். அவர் நம்முடைய கர்த்தர்.

எனவே பயத்தை விடுவோம். கவலைகளை அவருடைய பாதத்தில் ஒப்படைப்போம். நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் இந்த மாதத்தில் பிரவேசிப்போம்.

“கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்.” (சங்கீதம் 125:1)

தேவன் இந்த புதிய மாதத்தில் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் பணியையும் ஆசீர்வதித்து வாழச் செய்வாராக. ஆமென்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
சபை ஆயர்

# செயலர் மடல்

*“நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.” (சங்கீதம் 124:8)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், விசவாசிகள் யாவருக்கும் சபைகுழு சார்பில் அன்பின் நல்வாழ்த்துக்கள். இம்மட்டுமாக நம்மையும் நம் திருச்சபையின் ஊழியங்களையும் ஆசீர்வாதமாய் நடத்தி வருகிற நம் தேவாதி தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிப்போம்.

நமது திருச்சபையின் பிள்ளைகளை தேவனண்டையில் வழிநடத்தும் வண்ணம் கடந்த மாதம் 10 ஆம் நாள் முதல் 13 ஆம் நாள் வரை COME and SEE என்ற கருப்பொருளில், நமது பேராய முறைமையின்படி விடுமுறை வேதாகம பள்ளி (VBS) சிறப்பு நிகழ்வுகளை நமது திருச்சபையில் நடத்த கர்த்தர் கிருபை புரிந்தார். இந்த ஊழியத்திற்காக ஜெபித்த, தேவைகளுக்காக உதவிய, பல நிலைகளில் ஒத்துழைப்பு நல்கிய திருச்சபையின் விசுவாசிகள், தலைமையேற்று நடத்திய நமது ஆயர் அருள்திரு. தேவராஜ ஜெபஸ்டின் ஐயா, அற்பணத்தோடு இந்த ஊழியத்தை நடத்திய VBS Team Leader Mrs. Sheeba Reginald மற்றும் அவரோடு இணைந்து இந்த பணியை நிறைவேற்றிய ஏனைய Directors ஒவ்வொருவருக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அத்தோடு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் அறுவடைப் பண்டிகையை நாம் அக்டோபர் மாதம் 11-ஆம் நாள் சிறப்பாக கொண்டாட தீர்மானித்திருக்கிறோம். இவ்வருட அறுப்பின் பண்டிகையின் கன்வீனராக Mr Binu kumar N மற்றும் Mr. P. Paul Priner ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை வாழ்த்துகிறேன். திருச்சபையின் தேவைகளை மனதில் கொண்டு, நாம் இணைந்து எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை கர்த்தர் வாய்க்கச் செய்யவேண்டும் என்று ஒவ்வொருவரும், அனுதின ஜெபங்களில் ஜெபித்துக்கொள்ளவும், உங்களது உற்சாகமான பங்களிப்பை தந்து ஊழியங்களை தாங்கவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் அங்கத்தினர்களான Mrs & Mr. Rahul Gladlin Suthanya தம்பதிகளை காத்தர் ஆசீர்வதித்து இண்டாவது ஒரு பெண்குழந்தையை தந்திருக்கின்றார். மேலும் Mrs & Mr. Asker Jenisha தம்பதிகளை ஆசீர்வதித்து ஒரு ஆண் குழந்தையை தந்திருக்கிறார். பெற்றோர்களையும் குழந்தைகளையும் திருச்சபையின் சார்பாக வாழ்த்துகிறேன்.

நம்முடைய திருச்சபையின் அங்கத்தினர்களுக்காக, ஒருவருக்கொருவர் ஜெபித்துக் கொள்ளுங்கள். குறிப்பாக பலவிதமான தேவைகளோடு இருப்பவர்களுக்காகவும், வெயிலின் தாக்கத்திலிருந்து ஒவ்வொருவரும் பாதுகாக்கப்படவும், பிள்ளைகளுடைய விடுமுறை காலங்களுக்காகவும், பிரயாணம் செய்கிறவர்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம், கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக! ஆமென்.

**சபைக்குழு சார்பில்,**
**K. அருண்குமார் - செயலாளர்.**

# ஆண்கள் பகுதி

## சீலா - கிறிஸ்துவுக்காக நிலைத்த மனிதன்

முக்கிய வசனம்: **"கர்த்தரை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."** (அப்போஸ்தலர் 16:31)

புதிய ஏற்பாட்டில் பவுலின் முக்கியமான ஊழியத் தோழராக விளங்கியவர் சிலாஸ் (Silas அல்லது Silvanus). அவரைப் பற்றி அதிகம் எழுதப்படவில்லை என்றாலும், அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு உண்மையான கிறிஸ்தவ மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாக உள்ளது. அவர் தலைமை, பணிவு, துன்பத்தில் பொறுமை, ஜெப வாழ்க்கை, தேவனுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

## சீலா - வாழ்க்கையின் சிறப்புகள்

### 1. தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன்

சிலாஸ் எருசலேம் சபையின் தலைவர்களால் மதிக்கப்பட்ட விசுவாசியாக இருந்தார் (அப்போஸ்தலர் 15:22). நல்ல சாட்சியுள்ள மனிதனை தேவன் பயன்படுத்துகிறார்.

ஜான் ஸ்டாட் (John Stott): *"தேவன் திறமையுள்ளவர்களை மட்டுமல்ல, நம்பிக்கைக்குரியவர்களையும் பயன்படுத்துகிறார்."*

### 2. துன்பத்தில் துதியிட்ட மனிதன்

பிலிப்பியில் பவுலோடு சேர்ந்து அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போதும், சீலா முறையிடவில்லை, தேவனைத் துதித்தார் (அப்போ.16:25). அவர்களின் துதி சிறைக் கதவுகளைத் திறந்தது.

மத்தேயு ஹென்றி (Matthew Henry): *"துன்பத்தில் தேவனைத் துதிக்கும் இதயம், தேவனுடைய வல்லமையை அனுபவிக்கும்."*

### 3. சுவிசேஷத்திற்காக அர்ப்பணித்த மனிதன்

சீலா தனது சொந்த வசதியைத் தேடவில்லை, கிறிஸ்துவின் ராஜ்யத்தை முன்னேற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். அவர் பவுலின் உண்மையான ஊழியத் துணைவராக இருந்தார்.

வில்லியம் பார்க்லே (William Barclay): *"உண்மையான கிறிஸ்தவ தலைமை என்பது பிறருடன் இணைந்து தேவனுடைய வேலையை நிறைவேற்றுவதாகும்."*

### முடிவுரை

சீலா பெரும் புகழைப் பெற்றவராக இல்லாவிட்டாலும், தேவனுடைய ராஜ்யத்தில் மிகுந்த பயனுள்ள மனிதராக இருந்தார். அவரது வாழ்க்கை நமக்குச் சொல்லும் செய்தி: **"உண்மையாய், பணிவாய், விசுவாசமாய் தேவனுக்காக வாழும் மனிதனை தேவன் வல்லமையாய் பயன்படுத்துவார்."**

ஆண்களாகிய நாம் ஒவ்வொருவரும் சீலாவைப் போல விசுவாசம், ஜெபம், துன்பத்தில் நிலைத்திருத்தல், மற்றும் ஊழிய அர்ப்பணிப்பு ஆகியவற்றில் வளரும்போது, குடும்பமும் சபையும் சமூகமும் ஆசீர்வதிக்கப்படும். ஆமென்.

**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
சபை ஆயர்

# பெண்கள் பகுதி

## விசுவாசத்தில் உறுதியாய் இருந்த ரோதை

அன்புக்குரியவர்களே நம்மில் அநேகர் ஜெபிக்கின்றோம், ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். ஆனால் நாம் ஜெபித்த விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்க தாமதம் ஏற்படும்போது சோர்ந்து போய்விடுகின்றோம். சுற்றியிருக்கிற சூழ்நிலைகளால் நாம் நெருக்கப் படுகிறதால் அவைகள் நிறைவேறும்போது அதை விசுவாசிப்பதில் தடுமாற்றம் கொள்கிறோம். ஆனால் திருமறையில் நாம் பார்ப்போம் என்றால் தன் விசுவாசத்தில் உறுதியாய் இருந்த ஒரு பெண்ணைக் குறித்து கூறப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் பெயர் ரோதை (Rhoda). ரோதை என்றால் கிரேக்க மொழியிலே ரோஜா என்று அர்த்தம். அவருடைய பெயரைப் போல விசுவாசம் என்னும் மணம் வீசுகிற மலராகத் திகழ்ந்தார். அந்தப் பெண்ணின் வாழ்விலிருந்து நாம் கற்று, அறிந்துகொள்ள வேண்டிய காரியங்கள் என்னவென்று பார்ப்போம்.

1. **விழித்திருந்து ஜெபிக்கிறவள் :**
*நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் (மத்தேயு 26:41)*
இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோசெயர் 4:2) நீங்கள் அப்போஸ்தலர் 12-ஆம் அதிகாரத்தில் படிப்பீர்களானால் அக்காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் பெருகி வருகிறதைக் கண்ட ஏரோது ராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி, யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான். பேதுருவைப் பிடித்து சிறைச்சாலையிலே வைத்து பஸ்கா பண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவரை வெளியே கொண்டு வரலாமென்று எண்ணி, அவரைக் காக்கும்படி காவலில் வைத்தான். அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காவல் வைக்கப்பட்டிருக்கையில் சபையார் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாளின் வீட்டில் அவருக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே

ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்படியாகப் பலப் பெண்களும், சீஷர்களும், மக்களும் கூடி ஜெபித்துக் கொண்டிருந்த இடத்தில் இருந்த ஒரு பெண் தான் ரோதை. இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடியக் காரியம் என்னவென்றால், ரோதை நள்ளிரவிலும் விழித்திருந்து ஜெபிக்கும் ஒரு ஜெபவீராங்கனையாக இருந்திருக்க வேண்டும். நள்ளிரவில் ஜெபிப்பது என்பது எளிதான ஒரு காரியம் அல்ல. நள்ளிரவு என்று சொன்னால் சரீரம் சோர்வடைகிற நேரம், நாள் முழுவதும் வேலை செய்து விட்டு களைத்து உறங்குகிற நேரம். அப்படிப்பட்ட நேரத்தில் ஒருவர் ஜெபிக்கிறார் என்றால் ஜெபத்தில் ஆர்வம் உள்ளவராக இருக்க வேண்டும், விழித்திருந்து ஜெபிக்கிற பழக்கம் உடையவராய் இருக்க வேண்டும். ஆம் ரோதை ஒரு ஜெபவீராங்கனையாக இருந்திருக்க வேண்டும். ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற தேவன் இவர்களுடைய ஜெபத்திற்குப் பிரதிபலனாக சிறைச்சாலையிலிருந்த பேதுருவிற்கு விடுதலை கொடுத்தார். இவ்வார்த்தைகளைப் படித்துக் கொண்டிருக்கின்ற எனக்கன்பான சகோதரியே, வாலிபப் பிள்ளைகளே! நானும் ஜெபிக்கிறேன் என்று சொல்லுகிற நம்முடைய ஜெபங்கள் எப்படியாய் இருக்கிறது? மற்றவர்கள் ஜெபிக்கிறார்கள், நானும் கூட சேர்ந்து ஜெபிக்கலேன்னா தப்பா நினைப்பார்கள் என்று கடமைக்காக ஜெபிக்கின்றோமா? அல்லது நம்முடைய ஜெபத்தில் தேவன் மேல் இருக்கிற அன்பு, தாகம், வாஞ்சை வெளிப்படுகின்றதா?

**2. தாழ்மையுள்ளவள் :**

*அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். அவர்கள் : நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள், அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள். (அப் : 12:14,15)*

பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்த சபையாருடைய ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் தமது தூதனைச் சிறைச்சாலைக்கு அனுப்பினார். தூதன் பேதுருவின் விலாவைத் தட்டி சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான் உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் சொன்னபடி பேதுரு அரையைக் கட்டிக்கொண்டு தூதனுடன் முதலாம் காவலையும், இரண்டாம் காவலையும் கடந்து நகரத்தின் வீதிக்கு வந்த போது தூதன் பேதுருவை விட்டுப் போய்விட்டார். அதுவரை தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்துக் கொண்டிருந்த பேதுரு இப்போது

தெளிவு பெற்று, சீஷர்கள் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானின் தாயாகிய மரியாளின் வீட்டில் இருப்பார்கள் என்று அறிந்திருந்தபடியினால் அங்கு வந்த போது உள்ளே ஜெபித்துக் கொண்டிருந்த சீஷர்கள் வீட்டுக்கதவை பூட்டியிருந்தபடியால் வெளியே நின்று தட்டிக் கொண்டு இருந்தார். அப்போது சபையார் ஜெபத்திலே தரித்திருந்ததால் தட்டுகிற சத்தம் கேட்காதிருந்தது. அங்கிருந்த ரோதை கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டு கதவருகே வந்து ஒற்றுக் கேட்டு வெளியே நிற்பது பேதுரு என்று அறிந்தாள். அவள் எப்படி அறிந்திருப்பாள்? ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறது (யோவான் 10:16,27). ஆம், ரோதை தங்களை வழிநடத்தின பேதுருவின் பேச்சை, பிரசங்கத்தை பல தடவை கேட்டிருப்பாள். அதனால் சந்தோஷத்தில் கதவைத் திறவாமல் உள்ளே ஓடி சீஷர்களிடத்தில் சொன்ன போது, அதைக் கேட்டு நம்பமுடியாத சீஷர்கள் நீ பிதற்றுகிறாய் என்றும் வெளியே நிற்பது பேதுருவின் தூதனாயிருக்கலாம் என்றும் சொன்னார்கள். பிதற்றுகிறாய் என்ற சொல் ஆங்கில வேதாகமத்தில் Mad என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் மூளை இல்லாமல் உளறுகிறாள் அல்லது அறிவு இல்லாமல் பேசுகிறாள் என்று சொல்லலாம். இப்படி யாராவது நம்மை சொன்னால் அதுவும் உண்மையான ஒரு காரியத்தை நாம் சொல்லும்போது பிதற்றுகிறாய், உளறுகிறாய் என்று சொன்னால் நமக்கு எப்படி இருக்கும்? நான் உண்மையைத் தானே சொல்கிறேன் என்று கோபம் வருமில்லையா? வாக்குவாதம் பண்ணுவோமல்லவா? பிறகு அதுவே தேவையில்லாமல் பெரிய சண்டையாக மாறும். ஆனால் இந்த நிலையிலும் ரோதை வீண்வாதம் செய்யாமல் பொறுமையாக இருந்தாள். தாழ்மையுடன், பொறுமையைக் காத்துக்கொண்டதினிமித்தம் பெருமையைப் பெற்றுக் கொண்டாள்.

**3. விசுவாசத்தில் உறுதியாய் இருந்தவள் :**

*பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்த போது அவனைக் கண்டு பிரமித்தார்கள் (அப் 12: 16)*

எனக்கன்பானவர்களே! சபையார் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்த போதும் அவர்கள் ஜெபத்திற்கு தேவன் ஆச்சரியவிதமாய் பதிலளித்த போது அதை விசுவாசிக்க முடியாமல் தடுமாறினார்கள். ஆதலால்தான் காவலில் இருந்த பேதுரு வெளியே நிற்பதைப் பார்த்து அவர்கள் கண்களால் நம்பமுடியாமல் பிரமிப்புடன் பார்த்தார்கள்.

எனக்கன்பான சகோதரியே! நாமும் பல நேரங்களில் இப்படித்தான் இருக்கிறோம். நாம் ஜெபம் செய்கிறவர்களாக இருந்தாலும் அந்த ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசிப்பதில்லை. நாம் சில காரியங்களை ஜெபித்திருப்போம். ஆனால் அந்தக் காரியம் நிறைவேற நன்றியோடு துதிக்க மறந்து விடுகிறோம். ஆனால் இந்த ரோதையைப் பாருங்கள், பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்துடன் உள்ளே ஓடி சீஷர்களிடம் சொன்னாள். அவர்கள் நீ பிதற்றுகிறாய் என்று சொன்னபோது அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள் என்று வேதம் சொல்கிறது. ஆம் சீஷர்கள் ஜெபித்தார்கள். ஆனால் காவலில் இருக்கிற மனிதன் எப்படி வெளியே வரமுடியும் என்று சந்தேகித்தார்கள். தேவனுடைய வல்லமையை, மகத்துவத்தை பலமுறை பார்த்திருந்தும் நினைவில் கொள்ளாமல் போனார்கள். ஆனால் ரோதையோ எப்படி முடியும்? எப்படி ஆகும் என்று எதையும் யோசிக்கவில்லை. தங்கள் ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளித்துவிட்டார் என்று மாத்திரம் விசுவாசித்தாள். ஆம், தேவன் இத்தகைய விசுவாசத்தைத்தான் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். எதையெதையோ நம்புகிறோம். யார் யாரோ சொல்வதையெல்லாம் விசுவாசிக்கிறோம். மனுஷர் கூறுவதைக் கேட்டு கேட்டு அலுத்துப் போனாலும், மனுஷ வாக்கை வேதவாக்காக மதிக்கிறோம். ஆனால் ஜீவனுள்ள தேவனைத் தான் விசுவாசிக்கத் தயங்குகிறோம்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடித்தளமே விசுவாசம் தான். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். அவிசுவாசத்தோடு இருப்போமானால் அற்புதங்கள் நமக்கு எட்டாதக் கனியாகவே இருக்கும். வேத வசனம் சொல்கிறது, **நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்.**

எனக்கன்பான சகோதரிகளே! நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தில் தளர்வடையாமல் வளர்வடைவோம். வளர்வடைந்த விசுவாசத்தால் நம் ஜெபத்தில் ஆண்டவரிடத்தில் கேட்கிறவைகளைப் பெற்றுக் கொள்வோம்.

ஆண்டவர் தாமே நம்மை அனைவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள் 7**

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

இன்றைய உலகில் மனிதனை அதிகமாக வாட்டுவது மனக்கவலையாகும். செல்வம், பதவி, புகழ், உடல்நலம் ஆகியவை இருந்தாலும் எதிர்காலம், குடும்பம், வேலை, வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய கவலை மனிதனை விட்டு நீங்குவதில்லை. இந்த நிலையில், திருவள்ளுவர் மனக் கவலையிலிருந்து முழுமையான விடுதலை இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்தவர்களுக்கே கிடைக்கும் என்று வலியுறுத்துகிறார்.

இதே உண்மையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், **“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”** (மத்தேயு 11:28) என்று அழைக்கிறார். மனித முயற்சிகள் தற்காலிக ஆறுதலை மட்டுமே தரும், ஆனால் தேவன் அளிக்கும் சமாதானம் மனதையும் சிந்தையையும் காக்கும் (பிலிப்பியர் 4:6–7).

திருவிவிலியத்தில் இயேசுவைச் சந்தித்தவர்களின் வாழ்க்கையில் கவலை சமாதானமாக மாறியது. மார்த்தாளின் பதற்றத்தை இயேசு மாற்றினார், இரத்தப்போக்கு நோயால் பன்னிரண்டு ஆண்டுகள் துன்பப்பட்ட பெண்ணுக்கு சுகமும் நம்பிக்கையும் அளித்தார். அலைகளைக் கண்டு பயந்த பேதுருவை தம் கரத்தால் காப்பாற்றினார். இவை அனைத்தும், சூழ்நிலைகளை நோக்காமல் கிறிஸ்துவை நோக்கும்போது உண்மையான சமாதானம் கிடைக்கும் என்பதை உணர்த்துகின்றன.

எனவே, நமது எல்லா கவலைகளையும் தேவன்மேல் ஒப்படைக்க வேண்டும். **“உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள், அவர் உங்களைக் கவனிக்கிறவராயிருக்கிறார்”** (1 பேதுரு 5:7) என்ற இறைவார்த்தையின்படி ஜெபம், தேவவசன தியானம், ஸ்தோத்திரம் மற்றும் விசுவாச வாழ்க்கை மனக்கவலையை வெல்லும் வல்லமையை அளிக்கின்றன.

சிலுவையில் இயேசு கிறிஸ்து நமது பாவம், துயரம், பயம் ஆகியவற்றைச் சுமந்து, உயிர்த்தெழுதலின் மூலம் நமக்கு புதிய நம்பிக்கையையும் நிலையான சமாதானத்தையும் அளித்தார். ஆகையால், திருவள்ளுவர் கூறிய இந்தக் குறளின் ஆழமான உண்மையை நம் வாழ்வில் கடைப்பிடித்து, எல்லா கவலைகளையும் ஆண்டவரிடம் ஒப்படைத்து, அவர் தரும் சமாதானத்தில் வாழ்வோம். ஆமென்.

Compiled by **Mrs. Reji Alwin**

# சுதந்திர தின இறைச்செய்தி

## "உண்மையான சுதந்திரம் கிறிஸ்துவில் மட்டுமே"

**"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால், நீங்கள் மெய்யாகவே விடுதலையுள்ளவர்களாயிருப்பீர்கள்." (யோவான் 8:36)**

ஆகஸ்ட் 15 இந்தியாவின் சுதந்திர தினம். 1947-ஆம் ஆண்டு பல சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தின் பலனாக இந்தியா ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அவர்களின் தியாகத்தை நினைவுகூரும் இந்த நாளில், அரசியல் சுதந்திரத்தைவிட மேலான ஆவிக்குரிய சுதந்திரத்தை நாம் சிந்திக்க வேண்டும். மனிதனை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கக்கூடியவர் இயேசு கிறிஸ்து மட்டுமே.

**1. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை**

ஒரு நாடு வெளிப்புற அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவது முக்கியமானது. ஆனால் மனிதன் பாவம், பயம், பேராசை, வெறுப்பு போன்றவற்றின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவது அதைவிட முக்கியமானது. "பாவஞ்செய்கிறவன் எல்லாரும் பாவத்திற்கு அடிமை" (யோவான் 8:34) என்று இயேசு கூறுகிறார்.

**2. இயேசு உண்மையான விடுதலையாளர்**

இயேசு அரசியல் புரட்சிக்காக அல்ல, மனிதனை பாவத்தின் பிடியிலிருந்து மீட்கவே வந்தார் (லூக்கா 4:18). சிலுவையில் தமது இரத்தத்தைச் சிந்தி நமக்கு இரட்சிப்பையும் உண்மையான சுதந்திரத்தையும் அளித்தார். "குமாரன் உங்களை விடுதலையாக்கினால்..." (யோவான் 8:36).

**3. சத்தியம் விடுதலையாக்குகிறது**

“நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” (யோவான் 8:32). அந்த சத்தியம் ஒரு கொள்கை அல்ல, இயேசு கிறிஸ்துவே (யோவான் 14:6). அவரை அறிந்தவர்களே உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள்.

**4. சுதந்திரம் பொறுப்பையும் தருகிறது**

கிறிஸ்து அளித்த சுதந்திரம் சுயநலத்திற்காக அல்ல, அன்பில் சேவை செய்யவும், நீதியை நிலைநிறுத்தவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் கொடுக்கப்பட்டது (கலாத்தியர் 5:1).

**5. நாட்டிற்காக ஜெபிப்போம்**

ஒரு கிறிஸ்தவரின் கடமை, நாட்டையும் அதன் தலைவர்களையும் மக்களையும் ஜெபத்தில் நினைப்பதே (1 தீமோத்தேயு 2:1–2). தேவன் நம் தேசத்திற்கு சமாதானம், நீதி, ஒற்றுமை, தேவபயம் ஆகியவற்றை அருளும்படி வேண்டுவோம்.

1947-இல் இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றது. ஆனால் இன்று ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மூலம் ஆவிக்குரிய சுதந்திரத்தைப் பெற வேண்டும். “நான் உண்மையாகவே கிறிஸ்துவின் சுதந்திரத்தில் வாழ்கிறேனா?” என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். நமது தேசம் தேவனை அறிந்து, அவரது சித்தத்தின்படி நடக்கும் தேசமாக மாறும்படி அனைவரும் ஜெபிப்போம். ஆமென்.

# கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

**“சமாதானம் உண்டாக்குகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்.” (மத்தேயு 5:9)**

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவர் இயேசு கூறிய எட்டு பாக்கியவாக்குகளில் ஏழாவது பாக்கியவாக்கு மத்தேயு 5:9 ஆகும். இந்த வசனத்தில் இயேசு, “சமாதானமாக இருப்பவர்கள்” என்று கூறவில்லை. “சமாதானம் உண்டாக்குகிறவர்கள்” என்று கூறுகிறார். அதாவது, சமாதானம் என்பது சண்டை இல்லாத நிலை மட்டுமல்ல, உடைந்த உறவுகளைச் சீர்செய்து,

அன்பையும் ஒற்றுமையையும் வளர்த்து, தேவனுடைய சமாதானத்தை உலகிற்கு எடுத்துச்செல்லும் செயல் ஆகும். இத்தகையவர்களே தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள் என்று ஆண்டவர் உறுதியளிக்கிறார்.

திருவிவிலியத்தில் சமாதானத்தின் மூலாதாரமாக தேவனே வெளிப்படுத்தப்படுகிறார். ஏசாயா 9:6-ல் இயேசு “சமாதானப் பிரபு” என்று அழைக்கப்படுகிறார். யோவான் 14:27-ல், **“என் சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன்”** என்று இயேசு வாக்குறுதி அளிக்கிறார். ரோமர் 5:1-ல், “விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு தேவனோடே சமாதானம் பெற்றிருக்கிறோம்” என்று பவுல் கூறுகிறார். எனவே உண்மையான சமாதானம் உலகத்திலிருந்து அல்ல, அது தேவனிடமிருந்து வருகிறது. தேவனோடு சமாதானம் பெற்றவர்களே மற்றவர்களிடமும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

புனித அகஸ்தீன், “எங்கள் இருதயம் உம்மில் இளைப்பாறும் வரை அமைதியடையாது” என்று கூறுகிறார். இந்த வார்த்தைகள் மனிதனின் உள்ளம் தேவனில் மட்டுமே உண்மையான அமைதியை அடைகிறது என்பதை வலியுறுத்துகின்றன. மார்ட்டின் லூதர், **“சமாதானம் என்பது தேவ கிருபையின் கனியாகும்”** என்று கூறுகிறார். ஜான் கால்வின், “தேவன் நம்மை சமாதானத்தின் கருவிகளாக உலகிற்கு அனுப்புகிறார்” என்று விளக்குகிறார். டீட்ரிக் போன்ஹோப்பர், **“கிறிஸ்துவின் சிலுவை மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்தியது”** என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு இறையியலாளர்கள் அனைவரும் உண்மையான சமாதானம் கிறிஸ்துவில் மட்டுமே இருக்கிறது என்பதை வலியுறுத்துகின்றனர்.

திருவிவிலியத்தில் பலர் சமாதானத்தை உருவாக்கியவர்களாக காணப்படுகின்றனர். நல்ல சமாரியன், இனப்பகையைத் தாண்டி காயமடைந்த மனிதனுக்கு உதவி செய்து அன்பின் மூலம் சமாதானத்தை வெளிப்படுத்தினார். அபிகாயில், தாவீதுக்கும் நாபாலுக்கும் இடையே ஏற்படவிருந்த இரத்தப்பழியை தன் ஞானத்தாலும் பணிவாலும் தடுத்து நிறுத்தினார். எஸ்தர் தன் மக்களைக் காப்பாற்றுவதற்காக தைரியமாக

அரசனிடம் சென்று அழிவைத் தவிர்த்தார். மரியாள் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக கீழ்ப்படிந்து உலகிற்கு இரட்சகரை அளித்தார், அவர் மூலம் உலகம் தேவனுடைய சமாதானத்தை அனுபவித்தது.

ஆரம்ப திருச்சபையும் சமாதான வாழ்க்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது. அப்போஸ்தலர் 2:42-47-ல் அவர்கள் ஒன்றுபட்டு ஜெபித்தனர், அன்புடன் வாழ்ந்தனர், தங்களுடைய உடைமைகளைப் பகிர்ந்து கொண்டனர். அந்த ஒற்றுமையும் சமாதானமும் திருச்சபையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. உண்மையான சமாதானம் திருச்சபையை உயிர்ப்பிக்கிறது. சமாதானம் இல்லாத இடத்தில் பிளவு, பகைமை மற்றும் ஆன்மீக பலவீனம் தோன்றுகிறது.

சமாதானத்தை அழிக்கும் காரணங்களும் திருவிவிலியத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அகந்தை, பொறாமை, கோபம், மன்னிக்காத மனம் ஆகியவை உறவுகளை உடைத்து விடுகின்றன. காயீன் பொறாமையால் தன் சகோதரன் ஆபேலைக் கொன்றான். யோசேப்பின் சகோதரர்கள் பொறாமையால் அவரை அடிமையாக விற்றனர். ஆனால் பின்னர் யோசேப்பு அவர்களை மன்னித்தபோது குடும்பத்தில் மீண்டும் சமாதானம் நிலைநிறுத்தப்பட்டது. மன்னிப்பு இல்லாமல் சமாதானம் நிலைக்காது என்பதை இந்த நிகழ்வு நமக்குக் கற்றுத்தருகிறது.

இன்றைய உலகிலும் இந்த போதனை மிகவும் அவசியமானதாக உள்ளது. குடும்பங்களில் கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் ஆகியோருக்கிடையே அன்பும் மன்னிப்பும் நிலவ வேண்டும். திருச்சபைகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் கிறிஸ்துவின் அன்பில் ஒன்றுபட்டு வாழ வேண்டும். வேலை செய்யும் இடங்களில் நேர்மை, பொறுமை, மரியாதை மற்றும் மன்னிக்கும் மனப்பான்மை சமாதானத்தை உருவாக்கும். சமுதாயத்தில் மத நல்லிணக்கம், அண்டை வீட்டாரிடம் அன்பு, ஏழைகளுக்கு உதவி, துன்பப்படுகிறவர்களை ஆறுதல்படுத்துதல் ஆகியவை சமாதானத்தை வெளிப்படுத்தும் கிறிஸ்தவ சாட்சிகளாக அமைகின்றன.

இயேசு கிறிஸ்துவே நமது சமாதானம் என்று எபேசியர் 2:14 அறிவிக்கிறது. சிலுவையில் அவர் மனிதனை தேவனோடும், மனிதனை மனிதனோடும் ஒப்புரவாக்கினார். ஆகவே, கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் சமாதானத்தை விரும்புபவர்களாக மட்டும் அல்ல, அதை உருவாக்குபவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நம்முடைய வார்த்தைகள், செயல்கள், உறவுகள் அனைத்திலும் தேவனுடைய சமாதானம் வெளிப்பட வேண்டும்.

இறுதியாக, மத்தேயு 5:9 நமக்கு ஒரு ஆசீர்வாதத்தையும் ஒரு பொறுப்பையும் அளிக்கிறது. சமாதானத்தை உண்டாக்குகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள். ஆகையால், நம் குடும்பத்தில், திருச்சபையில், பணியிடத்தில், சமுதாயத்தில் கிறிஸ்துவின் சமாதானத்தை விதைத்து, அன்பின் பாலங்களை அமைத்து, மன்னிப்பின் வழியில் நடந்து, தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தை நம் வாழ்க்கையால் வெளிப்படுத்துவோம். அப்போது உலகம் நம்மைப் பார்த்து, “இவர்கள் உண்மையாகவே தேவனுடைய பிள்ளைகள்” என்று சாட்சியிடும்.

**By Mrs. P. Johnsy Jebastin**

# மனிதர்களை தேடிய மாமனிதர்கள்

## முழுமையாக கிறிஸ்துவுக்காக வாழ்ந்த மனிதன்

C. T. Studd - வாழ்க்கை, இறைப்பணி, மற்றும் நமக்கான அழைப்பு
“உங்கள் உடல்களை தேவனுக்குப் பிரியமான, பரிசுத்தமும் ஜீவனுள்ள பலியாக ஒப்புக்கொடுங்கள்.” ரோமர் 12:1

C. T. Studd (1860–1931) செல்வம், புகழ், கிரிக்கெட் வெற்றி, வசதியான வாழ்க்கை அனைத்தையும் துறந்து, உலகின் பல நாடுகளில் நற்செய்தியை அறிவித்த மாபெரும் மிஷனரி. அவரது வாழ்க்கை, “கிறிஸ்துவுக்காக முழுமையாக வாழ்வது” என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு.

1. **வாழ்க்கையை மாற்றிய அழைப்பு**
   - இங்கிலாந்தில் செல்வந்த குடும்பத்தில் பிறந்தார்.
   - புகழ்பெற்ற கிரிக்கெட் வீரராக விளங்கினார்.
   - சகோதரரின் நோயின் மூலம் வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து, தன்னை முழுமையாக கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார்.

2. **மிஷன் வாழ்க்கை**
   - 1885 - Hudson Taylor-ன் அழைப்பை ஏற்று China Inland Mission-ல் சேர்ந்தார்.
   - 1894 - இந்தியாவில் பல பகுதிகளில் நற்செய்தி அறிவித்தார்.
   - காங்கோ (ஆப்பிரிக்கா) சென்று இறுதி மூச்சுவரை ஊழியம் செய்தார்.
   - 1913 - WEC International மிஷன் இயக்கத்தைத் தொடங்கினார்.

3. **அர்ப்பணிப்பின் சாட்சி**
   - பெற்றிருந்த பெரும் செல்வத்தை மிஷன் பணிகளுக்கும் ஏழைகளுக்கும் தானமாக வழங்கினார்.
   - அவர் கூறிய புகழ்பெற்ற வார்த்தை: "ஒரே ஒரு வாழ்க்கை, அது விரைவில் கடந்து போகும். கிறிஸ்துவுக்காகச் செய்தவை மட்டுமே நிலைத்திருக்கும்."

   1931 ஜூலை 16 அன்று காங்கோவில் இறுதி மூச்சுவரை சுவிசேஷப் பணியில் இருந்தபடியே ஆண்டவருக்குள் இளைப்பாறினார்.

**C. T. Studd வாழ்க்கை நமக்கு தரும் அழைப்பு**

- கிறிஸ்துவுக்காக வாழுங்கள்.
- சுவிசேஷத்திற்காக உழையுங்கள்.
- தேவனின் மகிமைக்காக செயல்படுங்கள்.
- இந்த வாழ்க்கை குறுகியது, கிறிஸ்துவுக்காகச் செய்ததே நித்திய பலனைத் தரும்.

**By Mr. Alwin**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## அறிவும் ஞானமும்

**இன்றைய மனிதர்கள் அறிவியல் மனிதர்கள்.**

அறிவு + இயல் = அறிவியல்.

அறிவை மையப்படுத்தும் மனிதர்கள் இன்றைய நவீன மனிதர்கள்.

'அறிவு வாழ்விற்கு வளமை சேர்க்கும், வல்லமையுள்ளதாக்கும்' என்ற தவறான சிந்தனையின் அடிப்படையில் உருவான வளர்ச்சி இது.

வளமான வாழ்விற்கு மிக அவசியமானது அறிவு அல்ல, மாறாக ஞானம்.

**இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**

- அறிவு காரண காரியங்களைத் தேடும், ஞானம் காரண காரியங்களைத் தாண்டிச் செல்லும்.
- அறிவு குற்றப்படுத்தும், ஞானம் புரிந்துகொள்ளும்.
- அறிவு அடிமைப்படுத்தும், ஞானம் விடுதலைகொடுக்கும்.
- அறிவு தன்னை மையப்படுத்தும், ஞானம் பிறரை மையப்படுத்தும்.
- அறிவு அகந்தைக்கு இட்டுச் செல்கிறது, ஞானம் தாழ்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.
- அறிவு புத்தகத்திலிருந்து கிடைக்கிறது, ஞானம் இறைவனிடமிருந்து கிடைக்கிறது.
- அறிவின் பார்வை குறுகலானது, அரைகுறையானது, ஞானத்தின் பார்வை பரந்துபட்டது, முழுமையானது.
- அறிவு தேவையில்லை என்பதல்ல இங்கு கூறப்படுவது! அறிவைத் தாண்டிய ஞானமும் வேண்டும் என்பதே வலியுறுத்தப் படுகிறது.
- இன்னும் சொல்லப்போனால், இந்த அறிவுகூட ஞானத்தால் வழிநடத்தப்பட வேண்டியிருக்கிறது.
- ஞானம் இல்லாத அறிவு ஆபத்தானது, அபாயகரமானது. அறிவு இல்லாத ஞானம் வாழ்வோடு இயையாதது.

**ஜெ மரிய அந்தோனி**

# திருமறை அறிவுப்போட்டி ஆகஸ்ட் 2026

## ஆதியாகமம் 11-15 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 23-08-2026)**

1. உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்தவன் யார் ?
2. ஆபிராம் கர்த்தருக்கு முதல் முறைமாக பலிபீடத்தை உண்டாக்கின இடம் எது?
3. தாறுமாறாக்கப்பட்டது எது?
4. சாராய் எகிப்தியரிடம் தன்னை யார் என்று கூறினாள்?
5. சோதோமின் ராஜாக்கள் முறிந்தோடின இடம் எது?
6. திகிலும் காரிருளும் யாரை மூடிக் கொண்டது?
7. ஆபிராமும், லோத்தும் ஒருமித்து குடியிருக்க முடியாத பூமி எது?
8. பார்வோனின் வீட்டார் வாதைகளால் பாதிக்கப்படுவதற்கு காரணமானவள் யார்?
9. சோதோமில் குடியிருந்தவன் யார்?
10. எலியேசரின் ஊர் எது?

# ஜூலை 2026 - சரியான விடைகள்

## ஆதியாகமம் 6-10 அதிகாரங்கள்

1. நோவா (7:1)
2. இரத்தம் (9:4)
3. நிம்ரோத் (10:9)
4. பூமி (6:11)
5. கர்த்தர் (8:21)
6. கானான் (9:25)
7. காம் (10:6)
8. ஒலிவமரத்தின் ஒரு இலை (8:11)
9. 600 வயது (7:6)
10. வானவில் (9:13-17)

# திருமறை அறிவுப்போட்டி சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1 | Mrs. மினு பெர்மின் |
| 2 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 3 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் |
| 4 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 5 | Mrs. ரோஸ்மின் கிருபா டார்வின் |
| 6 | Mrs. சபிதா அருண் |
| 7 | Mrs. ஆன்லெட் ஜட்சன் |
| 8 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 9 | Mrs. நித்தியா வின்செண்ட் |
| 10 | Mrs. பெனிஷா சிங் |
| 11 | Mrs. அனிலா சதீஷ் |
| 12 | Mrs. ஷாலினி E |
| 13 | Mrs. ஜெப ஷாலு ஜெகன் |
| 14 | Mrs. சுஜிலா சோமு |
| 15 | Mrs. வயோலா ஸ்டாலின் |
| 16 | Mrs. ஷாலினி டீனு |
| 17 | Mrs. வெனினா ஸ்டாலின் |
| 18 | Mrs. பொம்மி ராஜன் |
| 19 | Mrs. சிந்து மேரி |
| 20 | Mrs. ஜேன் மிராக்கிலின் |
| 21 | Mrs. ஆட்லின் ரீனா பிரபு |
| 22 | Mrs. கிறிஸ்டில்டா செல்வின் |
| 23 | Mrs. லாரா சுபின் |
| 24 | Mrs. விஜய லதா |
| 25 | Mrs. ஷெரின் ஜெபா |
| 26 | Mrs. ரேஷ்மா |
| 27 | Mrs. ஜாஸ்மின் வசந்த் |

# குறுக்கெழுத்து புதிர்

## வெளிப்படுத்தின விசேஷம் 19 - 22 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 23.08.2026)**

வயது : 21 வயதிற்கு மேல் உள்ளவர்கள்




**மேலிருந்து கீழ்**

1. பரிசுத்தவான்களின் நீதிசெயல்களை வெளிப்படுத்தினது எது?
2. பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் யார்?

**கீழிருந்து மேல்**

3. ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானது எது?
4. தனக்கு தரிசனம் கொடுத்த தூதனை வணங்க முற்பட்டவன் யார்?

**வலமிருந்து இடம்**

5. ஊழியக்காரரின் இரத்தத்தை சிந்தினவள் யார்?
6. புதிய எருசலேம் நகரில் காணப்படாதது எது?

**இடமிருந்து வலம்**

7. இரத்தம் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை அணிந்திருந்தவரின் பெயர் என்ன?
8. பெரு வெள்ளத்தின் இரைச்சல் போல் உண்டான சத்தம் எது?
9. புதிய எருசலேம் நகரின் மதில் எதினால் கட்டப்பட்டிருந்தது?
10. அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டவன் யார்?

(குறுக்கெழுத்து புதிர் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் நிரப்பி தரவும்.)

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடைகள் (வெளிப். 14-18)

| **மேலிருந்து கீழ்** | | **கீழிருந்து மேல்** | |
|---|---|---|---|
| 1 | இரத்தம் (14:19,20) | 2 | பாபிலோன் (14:8) |
| | | 3 | ஜாதிகள் (18:23) |
| | | 4 | கொடிய புண் (16:2) |
| | | 5 | கல் (18:21) |
| **வலமிருந்து இடம்** | | **இடமிருந்து வலம்** | |
| 6 | புதிய பாட்டு (14:3) | 9 | நித்திய சுவிசேஷம் (14:6) |
| 7 | வான பரியந்தம் (18:5) | 10 | புகை (15:8) |
| 8 | வாதைகள் (18:8) | | |

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடை எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Nisha Stalin | 13 | Shalini Teenu |
| 2 | Anlet Judson | 14 | Sindhu Mary |
